Krishnagiri DT

HMD

# அரையாண்டுத் தேர்வு - 2023

**11** - ஆம் வகுப்பு

## கணினி அறிவியல்

காலம் : 3.00 மணி

மதிப்பெண்கள் : 70

**I பகுதி - அ அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** 15 X 1 = 15

1. எந்தக் கணிப்பொறி தலைமுறையில் திரிதடையகம் பயன்படுத்தப்பட்டது?
அ) முதலாம் ஆ) இரண்டாம் இ) மூன்றாம் ஈ) நான்காம்

2. பின்வருவனவற்றுள் எது RISC செயலி ஆகும்?
அ) Intel P6 ஆ) Intel 386 & 486 இ) Pentium II ஈ) Motorola 68000

3. பின்வருவனவற்றுள் எது மொபைல் இயக்க அமைப்பாகும்?
அ) Windows 7 ஆ) BOSS இ) Linux ஈ) iOS

4. தேவையற்ற விவரங்களைப் புறக்கணித்து அல்லது மறைத்து வைத்திருப்பது அதன் முக்கிய பண்புகளை மட்டுமே பயன்படுத்துவது இவ்வாறு அழைக்கப்படுகிறது?
அ) விவரக்குறிப்பு ஆ) அருவமாக்கம் இ) ஒருங்கிணைத்தல் ஈ) பிரித்தல்

5. கீழ்க்காணும் மடக்கு எத்தனை முறை இயங்கும்?

```
i : = 0
while i ≠ 5
i : = i + 1
```

அ) 4 ஆ) 0 இ) 6 ஈ) 5

6. மடக்கின் உடற்பகுதி செயல்படுத்தும் போது, மாறிகளுக்கிடையேயான ஒரு பண்பு மாறாமல் இருப்பது எவ்வாறு அழைக்கப்படுகிறது?
அ) தற்சுழற்சி ஆ) மடக்கு மாற்றமிலி இ) மதிப்பிருத்தல் ஈ) நிபந்தனை

7. பின்வரும் செயற்குறிகளில் C++ - ல் தரவு பெறும் செயற்குறி எது?
அ) >> ஆ) << இ) && ஈ) <>

8. \n - க்கு மாற்றாக பயன்படுவது எது? அ) \t ஆ) \a இ) endl ஈ) \0

9. நிரலின் செயலாக்கம் எந்த செயற்கூறிலிருந்து தொடங்கும்?
அ) start() ஆ) stop () இ) begin () ஈ) main ()

10. அணியின் கீழொட்டு எப்பொழுதும் எந்த எண்ணுடன் தொடங்கும்? அ) -1 ஆ) 2 இ) 0 ஈ) 3

11. C++ - கட்டுருக்களை உருவாக்க எந்த சிறப்பு சொல் பயன்படுகிறது?
அ) struct ஆ) structure இ) void ஈ) const

12. இவற்றுள் எது ஏற்கனவே இருக்கும் இனக்குழு அடிப்படையில் புதிய இனக்குழுக்களை உருவாக்கும் செயல் முறையாகும்?
அ) மரபுரிமம் ஆ) பல்லுருவாக்கம் இ) உறைபொதியாக்கம் ஈ) அருவமாக்கம்

13. 10 முறை $ என்ற என்ற குறியீட்டை வெளியிட கீழ்க்காணும் நிரலில் dispchar() என்ற செயற்கூறை எவ்வாறு அழைப்பாய்?

```
void dispchar(char ch=`$',int size =10)
{
for (int i=1; i<=size; i++)
cout<<ch;
}
```

அ) dispchar(ch, size); ஆ) dispchar($,10);
இ) dispchar( ); ஈ) dispchar('$', 10 times);

14. பின்வருவனவற்றுள் எது மரபுரிமம் பெற்ற வரிசையில் இயக்கப்படுகிறது?
அ) உறுப்பு செயற்கூறு ஆ) ஆக்கி இ) அழிப்பி ஈ) பொருள்

15. கீழ்க்கண்டவற்றில் எது கணிப்பொறியில் தீங்கிழைக்காத நிரல்கள்?
அ) வார்ம்ஸ் ஆ) ட்ரோஜன் இ) ஸ்பைவேர் ஈ) குக்கிகள்

**II பகுதி - ஆ ஏதேனும் 6 வினாக்களுக்கு விடையளி. (கட்டாய வினா எண். 24)** 6 X 2 = 12

16. தருவிக்கப்பட்ட வாயில்கள் என்றால் என்ன?
17. GUI என்றால் என்ன?
18. கணிப்பொறி என்றால் என்ன?
19. முக்கிய கட்டுப்பாட்டு பாய்வு கூற்றுகள் யாவை?
20. சிறப்பு சொற்கள் என்றால் என்ன? சிறப்புச் சொற்களை குறிப்பெயர்களாக பயன்படுத்தலாமா?
21. அளபுரு என்றால் என்ன? அதன் வகைகளைப் பட்டியலிடுக.
22. பின்வரும் அணியின் உறுப்புகள் எத்தனை மற்றும் அதன் நினைவக ஒதுக்கீட்டை எழுதுக. char ch[5];
23. பல்லுருவாக்கம் என்றால் என்ன?



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

24. அழிப்பியின் முக்கியத்துவத்தை பற்றி எழுதுக.

III பகுதி - இ ஏதேனும் 6 வினாக்களுக்கு விடையளி. (கட்டாய வினா எண். 33) 6 X 3 = 18

25. எண் $340_{10}$ -ஐ இருநிலை, எண்ம நிலை மற்றும் பதினாறு நிலை எண்ணாக மாற்றுக.
26. CD மற்றும் DVD வேறுபடுத்துக.
27. Cortana - வின் குறிப்பிட்ட பயன்பாட்டினை எழுதுக.
28. பாய்வு படம், போலிக் குறிமுறை மற்றும் நிரலாக்க மொழி ஆகியவற்றை வரையறுக்கவும்.
29. செயற்குறி பணிமிகுப்பு என்றால் என்ன? பணிமிகுப்பு செய்ய முடியாத செயற்குறிகள் யாவை?
30. isupper() மற்றும் topper() செயற்கூறுகளின் வேறுபாடுகள் யாவை?
31. கட்டக நிரலாக்கத்தின் சில அம்சங்கள் பற்றி குறிப்பு வரைக.
32. இனக்குழு உறுப்பு செயற்கூறானது எவ்வாறு வரையறுக்கப்படுகிறது? எடுத்துக்காட்டு தருக.
33. பின்வரும் எண் தொடரை அச்சிடுவதற்கான C++ நிரலை எழுதுக. 1 3 5 7 .......... 75.

IV பகுதி - ஈ அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 5 X 5 = 25

34. அ) கணிப்பொறியின் பல்வேறு தலைமுறைகளை விளக்குக. ***(அல்லது)***
ஆ) நுண்செயலியின் பண்புக் கூறுகளை விளக்குக.
35. அ) மாறியின் வரையெல்லை விதிமுறைகளை எடுத்துக்காட்டுடன் விளக்குக. ***(அல்லது)***
ஆ) பிழைகளின் வகைகள் விவரிக்கவும்.
36. அ) நுழைவு சோதிப்பு மடக்கு என்றால் என்ன? ஏதேனும் ஒரு நுழைவு சோதிப்பு மடக்கை அதன் கட்டளை அமைப்பு மற்றும் பொருத்தமான எடுத்துக்காட்டுடன் விளக்குக. ***(அல்லது)***
ஆ) இரண்டு அணிக்கோவைகளில் உள்ள மதிப்புகளின் வித்தியாசம் கண்டறிய நிரலை எழுதுக.
37. அ) மரபுரிமத்தின் பல்வேறு வகைகளை விவரிக்கவும். ***(அல்லது)***
ஆ) இணையதள தாக்குதலின் வகைகள் யாவை?
38. அ) பொருள் நோக்கு நிரலாக்கம் மற்றும் நடைமுறை நிரலாக்கம் - வேறுபடுத்துக. ***(அல்லது)***
ஆ) நிரலின் வெளியீட்டை எழுதுக.

```
#include<iostream>
using namespace std;
class simple
{
        private:
        int a,b;
        public:
        simple()
        {
        a=0;
        b=0;
        cout<<"\nConstructor of class simple";
        }
        ~simple()
        {
        cout<<"\nDestructor is executed";
        }
        void getdata()
        {
        cout<<"\nEnter the values for a and b";
        cin>>a>>b;
        }
        void putdata()
        {
        cout<<"\nThe two integers are"<<a<<'\t'<<b<<endl;
        cout<<"\nThe sum of the variables"<<a+b;
        }
};
int main( )
{
        simple s;
        s.getdata();
        s.putdata();
        return 0;
}
```



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com